**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**

கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா ராஜவேல், Ph.D. | தொலைபேசி: 0422 – 6611302

மக்கள் தொடர்பு அலுவலர் | நிகரி: 0422 – 2431821

கைப்பேசி : 94890 56730 | மின்னஞ்சல்: pro@tnau.ac.in


**பெறுநர்,** தேதி : 17.02.2026

ஆசிரியர்,

**ஐயா,**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "பாரம்பரிய பயறுவகை ரகங்களின் மதிப்பூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல்" பற்றிய பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பயிர் மேலாண்மை இயக்ககம், வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோயம்புத்தூர் **16.02.2026** அன்று "பாரம்பரிய பயறு வகைகளின் மதிப்பூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் என்ற தலைப்பில் விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கான பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இந்த பயிற்சி வளர்ந்து வரும் நாடுகளில் எதிர்பார்க்கப்படும் காலநிலை மாற்றுச் சூழ்நிலைகளின் கீழ் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்த காலநிலை மாற்றத்திற்குத் தாங்கும் திறன் கொண்ட பயிர்களைப் பயன்படுத்துதல் என்ற திட்டத்தின் கீழ் கிராண்ட் சேலன்ஜ்ஸ் கனடா நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்டது. முனைவர் எஸ். கோகிலவாணி உதவி பேராசிரியர் (வேளாண் வானிலையியல்) அவர்கள் வரவேற்புரை வழங்கி, திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் பாரம்பரிய பயறு வகைகளின் அவசியத்தை பற்றி விளக்கினார். இந்த பயிற்சியின் முக்கிய நோக்கம், ஊட்டச்சத்து மிகுந்த பாரம்பரிய பயறு வகைகளை பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அறிமுகப்படுத்துதல் மற்றும் வாழ்க்கை முறை நோய்களுக்கு எதிரான பாதுகாப்பை வலுப்படுத்துதல் ஆகும்.

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் என்.கே.சத்தியமூர்த்தி அவர்கள் மாறிவரும் காலநிலை மற்றும் அதன் வேளாண் உற்பத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்து சிறப்புரை வழங்கினார். அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். எஸ். கார்த்திகேயன் அவர்கள் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை நுகர்வோர் விரும்பும் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். பயிற்சியை முனைவர் எம்.கே. கலாராணி (இயக்குநர் பயிர் மேலாண்மை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்) அவர்கள் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். அவர் மாறிவரும் காலநிலைக்கு ஏற்ப பெண்களின் வாழ்வாதாரம் மேம்படுத்துவதற்கு இம்மாதிரியான மதிப்புக்கூட்டல் தொழில் பயிற்சி மிகவும் உறுதுணையாக இருக்கும் என எடுத்துரைத்தார். மேலும் அவர் காலநிலை மாற்றத்தை பற்றியும் அதனால் பயிர்களில் ஏற்படும் பாதிப்பு குறித்தும் எடுத்துரைத்தார். அதன் பின் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்பங்களை மதிப்புக் கூட்டலில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்று கூறினார்.

இந்த பயிற்சியின் முக்கிய நோக்கம், ஊட்டச்சத்து மிகுந்த பாரம்பரிய பயறு வகைகளை பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அறிமுகப்படுத்துதல் மற்றும் வாழ்க்கைமுறை நோய்களுக்கு எதிரான பாதுகாப்பை வலுப்படுத்துதல் ஆகும். அடுத்து உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து துறையின் பேராசிரியர் முனைவர் பி. கீதா அவர்கள் பருப்பு வகைகளின் மதிப்புக் கூட்டல் தயாரிப்புகள் குறித்து விளக்கமளித்தார்.

மனித வன மேலாண்மை, வேளாண்மை மற்றும் ஊரக மேலாண்மை துறை பேராசிரியர் முனைவர் எம்.மலர்கொடி அவர்கள் தொடக்க நிறுவனமாக (Startup) ஆரம்பிப்பதற்கு முன் பின்பற்ற வேண்டிய வணிகத் திட்டங்கள் மற்றும் வணிக நெறிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். திரு. ஜிதேந்திரன் பி.பி. பிரிவு மேலாளர் அவர்கள் விவசாயிகளுக்கான கடன் வசதிகள் மற்றும் வங்கி ஆதரவுகள் குறித்து விளக்கமளித்தார். வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தின் நிர்வாக இயக்குநரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான திரு.ஏ.வி. ஞானசம்பந்தம் அவர்கள் விவசாயிகளை தொழில் முனைவோராக மாற்றுவதில் வேளாண் வணிக மேம்பாட்டின் (Agri Business Development) பங்கு குறித்து எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் வடமேற்கு மண்டலத்தைச் சேர்ந்த தொடக்க நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியின் முடிவில் உணவு மற்றும் வேளாண் செயலாக்க பொறியியல் துறையின் உதவி பேராசிரியர் முனைவர் எஸ். பர்வீன் அவர்கள் நன்றி உரையாற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**